1978 செப்டம்பர் 7]

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் உடனெழுத்தர்கள்

* வினா 72—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்படும் இளநிலை எழுத்தர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் தகுதிவாய்ந்த உடனெழுத்தர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து நியமனம்செய்யப் பட வேண்டுமென அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேலம்-நாகை விரைவுப் பேருந்து வழித்தடம்.

* வினா 73—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம்-நாகை வழித்தடத்தில் (ஆத்தூர்-கும்பகோணம் வழி) இயக்கப்பட்டு வந்த பல்லவன் விரைவுப் பேருந்துகள் நிறுத்தப்பட்டதன் காரணம் யாது ?

(ஆ) இதனை மீண்டும் துவங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சேலம்-நாகை (வழி ஆத்தூர், கும்பகோணம்) வழித்தடத்தில் இயங்கி வந்த விரைவுப் பேருந்துகள் இலாபகரமாக இல்லாததாலும், தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கி வந்ததாலும். 1-2-77 முதல் நிறுத்தப் பட்டுள்ளது.

(ஆ) இதனை மீண்டும் துவக்குவதற்கான சூழ்நிலை இல்லை.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, பல்லவன் போக்கு வரத்துக் கழகம் சேலம்-நாகை வழித்தடங்களில் முதலிலே $6\frac{1}{4}$ மணிக்கு ஒரு வண்டியும் பிறகு $3\frac{1}{4}$ மணிக்கு ஒரு வண்டியையும் விட்டு வந்தது. ஆனால் இந்தக் கேள்வியைப் போட்டதற்குப் பிறகு இரண்டு மாதங்கள் காலையிலே விடப் பட்ட பேருந்து இப்போது நிறுத்தப்பட்டு விட்டது. வண்டிகள் சரியாக ஓடாததற்குக் காரணம் வசூலாகவில்லை என்பது தான்.